**கவனிக்க.-** (i) இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2020 ஆம் ஆண்டுக்கான பதுளை மாவட்டத்திற்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் , ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.

(ii) 2020.01.09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2159 - 2020 ජනවාරි මස 17 වැනි සිකුරාදා - 2020.01.17**

*2159 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 64 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 78 |


**கவனிக்க.-** (i) கண்டிய விவாகம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் 2020, சனவரி மாதம் 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) இலங்கை இயன்மருத்துவச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2020, சனவரி மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, சனவரி மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*61-B 81598-5,403 (2020/01)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான “புதிய சேர்வாளர்கள்” ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலும்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லுாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலும். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதுக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும். தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2020, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, திசெம்பர் 24.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | பாணந்துறை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுண பிரிவின் எளுவில பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |

01-467

## இலங்கைப் பொலிஸ்

உப பொலிஸ் பரிசோதகர் பதவி (சாதாரணம்)

இலங்கைப் பொலிஸில் பயிலுனர் உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு)/பயிலுநர் ஆட்சேர்ப்பு பிரிவு, இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2020.02.17 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 3,93,480.00 - 7 × 4,440 - 2 × 5,940 - 25 × 7,920 - ரூபா 6,34,440.00.

பொது நிர்வாக சுற்று நிருபம் இலக்கம் 3/2016 இன் பிரகாரம் சம்பள அளவுத்திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவராவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : ரூபா 7,800.00 ;

(ஆ) பொ. நி. சு. இல. 03/2016 இற்கு அமைய அடிப்படைச் சம்பளத்தில் 40% கொடுப்பனவாக குறிப்பிடப்பட்ட பதவிக்கு வழங்கப்படும் ரூபா 13,116.00

(இ) கடினக் கொடுப்பனவுகள் : ரூபா 2,000.00 ;

(ஈ) இடைக்கால கொடுப்பனவு : ரூபா 2,500.00

(உ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250.00 ;

(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : ரூபா 12,000.00 (ஆகக்கூடியது விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்)

(எ) இணைந்த கொடுப்பனவுகள் : ரூபா 11,200.00 (ஆகக்கூடியது விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்)

**இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக** :

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய சிகிச்சைகளைப் பெறுவதற்கு நிதி மூலமான உதவித்தொகைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

04. **தேவையான அடிப்படைத் தகைமைகள்** :

(அ) **வயதெல்லை**.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இலங்கைப் பொலிஸ் சேவையில் சேவை செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு உட்பட்டவர்களாக இருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(ஆ) **கல்வித் தகைமைகள்.-**

* க.பொ.த. (சா. தர.) பரீட்சையில் கணிதம் மற்றும் தாய்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன்

* க. பொ. த. (உ. தர.) பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.-** இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும் போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும் இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா. தர.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.-** க. பொ. த. (சா. தர.) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்பப் பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்த போதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படுவார்.

**குறிப்பு 3.-** விருப்பத்திற்குரிய தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர.) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர.) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாகக் கருதப்பட மாட்டாது.

(இ) **பௌதீகத் தகைமைகள் :**

* உயரம் : 05 அடி 06 அங்குலம் (ஆகக் குறைந்தது)
* மார்பு : 32 அங்குலம் ஆகக் குறைந்தது. (மூச்சுவிட்ட நிலையில்)

**குறிப்பு 1.-** சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமைகாட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்கு பற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதீக தகைமைகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின் படி தகைமை பெறுவர்.

(ஈ) **பார்வை தொடர்பான தேவை.-** ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) **பிற தகைமைகள்.-** விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் (விவாகரத்துப் பெற்றவர்கள் தகுதியற்றவராக கருதப்படுவர்). மற்றைய தகைமைகள் உடைய ஏற்கனவே இலங்கை பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இந்நிபந்தனை மாத்திரம் ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை.-**

* விண்ணப்பங்களின் படி தகைமையைப் பெறும் விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற் தகுதிப் பரீட்சையில் பங்கு பற்றி அதிலும் சித்தியெய்தல் வேண்டும்.

1000 மீற்றர் 3 நிமிடங்கள் 14 விநாடிகள்

* உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் இறுதி எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :

* 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல். (காலம் : 45 நிமிடங்கள்)
* பொது அறிவும் நுண்ணறிவும் (காலம் : 1 மணித்தியாலம்)

6. **மருத்துவப் பரிசோதனை**.- விண்ணப்பதாரர் தனது நியமனத்தை பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்புச் செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின் படி தெரிவு செய்யப்படுவர். மருத்துவப் பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர். மருத்துவ பரிசோதனை பிரதான மருத்துவ உத்தியோகத்தரினால் உடல்நலம் இல. 169 படிவத்திற்கமைய அறிக்கை தயாரிக்கப்படும் என்பதுடன் மருத்துவ பரிசோதனை ஒரே தடவையில் நடைபெறும்.

7. **பின்னணி விசாரணைகள்**.-

(அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பாதகமான அறிக்கைகள் உள்ள விண்ணப்பதாரர்கள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

8. **அரசகரும மொழித் தேர்ச்சிக் கொள்கையை அமுல்படுத்தல்**.-

* பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007 என்ற இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரசாங்க சேவைக்கு/ மாகாண அரசாங்க சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 05 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

* 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள் அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

* நியமனத் திகதியில் இருந்து 05 வருடத்திற்குள் இரண்டாம் அரச கரும மொழியில் சித்தியடையாதவர்கள் குறித்த மொழியில் தேர்ச்சி அடையும் வரை சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

9. **நியமனக் கொள்கைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கு உரித்துடையவர்.

10. **சேவை நிபந்தனைகள்**.-

(அ) நியமனம் 03 ஆண்டுகால தகுதிகாண்கால அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தவும் ஏற்கனவே விதிக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் விதிக்கப்படும் விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக் கோவையின் I ஆம் மற்றும் II ஆம் தொகுதிகளிலான ஏற்பாடுகளுக்கும், நிதி ஒழுங்கு விதிகள், பொலிஸ் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய மற்றும் 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 1952/2006 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்தின் பிரகாரமும் 2007.08.09 ஆந் திகதிய திருத்தஞ் செய்யப்பட்ட அச்சுற்றுநிருபத்தின் பிரகாரமும் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களை தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவு செய்யயப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 03 வருட தகுதிகாண் நிலையில் இலங்கைப் பொலிஸில் பணியாற்ற வேண்டியதுடன் இப்பயிலுநர் சேவைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப் பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்ளலானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக் கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர்கள் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்றுக் கோவையினை பின்பற்றுவதாக பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஏ) தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர்கள் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்ய வேண்டும்.

(ஒ) தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர்கள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் இலங்கைப் பொலிஸில் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இல் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க் காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது.)

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணநலச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);
(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;
(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக்கிருத்தி செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ் ;
(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;
(ஊ) தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி.

13. (அ) தற்போது அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற ஒரு சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11 × 8 அங்குல அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். எக்காரணம் கொண்டும் எந்த ஒரு உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ் அறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்குப் போக்குவரத்துச் செலவுகளோ பிற செலவுகளோ வழங்கப்படமாட்டாது.

சீ. டி. விக்கிரமரத்ன,
பதில் பொலிஸ் மாஅதிபர்.

அலுவலக பாவனைக்கு
2 × 1 1/2 அங்குலம்

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ்**

பயிலுனர் உப பொலிஸ் பரிசோதகர் பதவி (சாதரணம்)

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களில்) விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகப் பிரிவு :-----.

மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :-----. பிரதேச செயலகம் :-----.

(ஊ) கடிதம் அனுப்பும் முகவரி :-----.

(எ) தொலைபேசி இல. வீடு :-----. கையடக்க தொலைபேசி இல. :------.

6. (அ) இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----.

(இ) நீங்கள் வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால், பிறந்த இடம் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----

8. உயரம் : அடி :----- அங்குலம் :----- மார்பு : (அங்குலம்) -----

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.
(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறன்கள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ) -------------------.
(ஆ) -------------------.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? :-------------------.
பதவி மற்றும் வழங்கப்பட்ட இலக்கம் :-------------------.
ஆம் எனின், அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக : -------------------.

16. (அ) நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் : -------------------.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கின்றீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் :-------------------.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-------------------.

18. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீர்களா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீர்களா? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின், விபரம் தருக. :-------------------.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின், ஏதேனும் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின், விபரம் தருக :-------------------.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கைப் பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ....................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கின்றேன்.

.................,
(திணைக்களத் தலைவரின் கையொப்பம்)
பதவி முத்திரை இடப்படவேண்டும்.

பதவி :--------------------.

திகதி :--------------------.

01-552/1

---

## இலங்கைப் பொலிஸ்

பெண் உப பொலிஸ் பரிசோதகர் பதவி (சாதாரணம்)

இலங்கைப் பொலிஸ் சேவையில் பயிலுனர் பெண் உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் பயிலுநர் ஆட்சேர்ப்பு பிரிவு, இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2020.02.17 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸில் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 3,93,480.00 - 7 × 4,440 - 2 × 5,940 - 25 × 7,920 - ரூபா 6,34,440.00.

பொது நிர்வாக சுற்று நிருபம் இலக்கம் 3-2016 இன் பிரகாரம் சம்பள அளவுத்திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்று நிருப இலக்கம் 2416/2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவராவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :

மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதம் தோறும் வழங்கப்படும்.

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : ரூபா 7,800.00 ;

(ஆ) பொ. நி. சு. இல. 03/2016 இற்கு அமைய அடிப்படைச் சம்பளத்தில் 40% கொடுப்பனவாக குறிப்பிடப்பட்ட பதவிக்கு வழங்கப்படும் ரூபா 13,116.00

(இ) கடினக் கொடுப்பனவுகள் : ரூபா 2,000.00 ;

(ஈ) இடைக்காலக் கொடுப்பனவு : ரூபா 2,500.00

(உ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250.00 ;

(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : ரூபா 12,000.00 (ஆகக்கூடியது விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்)

(எ) இணைந்த கொடுப்பனவுகள் : ரூபா 11,200.00 (ஆகக்கூடியது விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்)

**இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :**

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய சிகிச்சைகளைப் பெறுவதற்கு நிதி மூலமான உதவித்தொகைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

04. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) **வயதெல்லை.**- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 18-28 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இலங்கைப் பொலிஸ் சேவையில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு உட்பட்டவர்களாக இருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(ஆ) **கல்வித் தகைமைகள்.**-

* க.பொ.த. (சா. தர.) பரீட்சையில் கணிதம் மற்றும் தாய்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன்

* விண்ணப்பதாரி க. பொ. த. (உ. தர.) பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாட வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும் போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும் இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா. தர.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.**- க. பொ. த. (சா. தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்பப் பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்த போதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படுவார்.

**குறிப்பு 3.**- விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க.பொ.த.(சா.தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர.) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாகக் கருதப்படமாட்டாது.

(இ) **உடற் தகைமைகள் :**

* உயரம் : 05 அடி 04 அங்குலம் (ஆகக் குறைந்தது)

**குறிப்பு 1.**- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமைகாட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்கு பற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உடற் தகைமைகள் சற்று குறைவாக இருப்பின், அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின் படி தகைமை பெறுவர்.

(ஈ) **பார்வை தொடர்பான தேவை.**- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்றக் கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) **பிற தகைமைகள்.**- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள் தகுதியற்றவராக கருதப்படுவர்). மற்றைய தகைமைகள் உடைய ஏற்கனவே இலங்கை பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இந்நிபந்தனை மாத்திரம் ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை.**-

* விண்ணப்பங்களின் படி தகைமையைப் பெறும் விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற் தகுதிப் பரீட்சையில் பங்கு பற்றி அதிலும் சித்தியெய்தல் வேண்டும்.
  1000 மீற்றர் 5 நிமிடங்கள் 14 விநாடிகள்

* உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் இறுதி எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.
  எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :
  * 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுதல். (காலம் : 45 நிமிடங்கள்)
  * பொது அறிவும் நுண்ணறிவும் (காலம் : 01 மணித்தியாலம்)

6. **மருத்துவப் பரிசோதனை.**- விண்ணப்பதாரர் தனது நியமனத்தை பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும். மருத்துவப் பரிசோதனையானது ஆட்சேர்ப்புச் செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, ஆகக்கூடிய புள்ளிகள் மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலில் அவர்களின் நிலையின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுவர். மருத்துவப் பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணைகள்.**-

(அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பாதகமான அறிக்கைகள் உள்ள விண்ணப்பதாரர்கள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

8. **அரசகரும மொழித் தேர்ச்சிக் கொள்கையை அமுல்படுத்தல்.**-

* பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007 என்ற இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரசாங்க சேவைக்கு/மாகாண அரசாங்க சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 05 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

* 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள் அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

* நியமனத் திகதியில் இருந்து 05 வருடத்திற்குள் இரண்டாம் அரச கரும மொழியில் சித்தியடையாதவர்கள் குறித்த மொழியில் தேர்ச்சி அடையும் வரை சம்பள ஏற்றம் பிற்போடப்படும்.

9. **நியமனக் கொள்கைகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு அங்கத்துவப் பணம் செலுத்துதல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.-

(அ) நியமனம் 03 ஆண்டுகால தகுதிகாண்கால அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தவும் ஏற்கனவே விதிக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் விதிக்கப்படும் விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக் கோவையின் I ஆம் மற்றும் II ஆம் தொகுதிகளிலான ஏற்பாடுகளுக்கும், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய மற்றும் 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 1952/2006 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும் 2007.08.09 ஆந் திகதிய திருத்தஞ்செய்யப்பட்ட அச்சுற்றுநிருபத்தின் பிரகாரமும் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களை தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 03 வருட தகுதிகாண் நிலையில் இலங்கைப் பொலிஸில் பணியாற்ற வேண்டியதுடன் இப்பயிலுநர் சேவைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப் பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்ளலானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக் கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) தகுதிகாண் பெண் உப பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கை 1693/ 2003 பிரகாரம் பொலிஸ் விதிமுறைகளுக்கு ஏற்ப கட்டுப்பட்டு நடப்பதாக உறுதியுரை /சத்தியம் செய்ய வேண்டும்.

(ஏ) தகுதிகாண் பெண் உப பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்ய வேண்டும்.

(ஒ) தகுதிகாண் பெண் உப பொலிஸ் பரிசோதகர் இலங்கைப் பொலிஸ் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இல் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க் காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது.)

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணநலச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);
(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;
(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக்கிருத்தி செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;
(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி.

13. (அ) தற்போது அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற ஒரு சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11 × 8 அங்குல அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். எக்காரணம் கொண்டும் எந்த ஒரு உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை பிரத்தியேகமாக கையளித்தலாகாது.

14. இவ் அறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்குப் போக்குவரத்துச் செலவுகளோ பிற செலவுகளோ வழங்கப்படமாட்டாது.

சீ. டி. விக்கிரமரத்ன,
பிரதிப் பொலிஸ் மாஅதிபர்.

| அலுவலக பாவனைக்கு 2 × 1 1/2 அங்குலம் |
|---|

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ்**

பயிலுனர் பெண் உப பொலிஸ் பரிசோதகர் பதவி (சாதாரணம்)

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களில் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ள படியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகப் பிரிவு :-----.

மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :-----. பிரதேச செயலகம் :-----.

(ஊ) கடிதம் அனுப்பவேண்டிய முகவரி :-----.

(எ) தொலைபேசி இல. வீடு :-----. கையடக்க தொலைபேசி இல. :------.

6. (அ) இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----.

(இ) நீங்கள் வம்சாவழி மூலம் இலங்கைப் பிரசையானால், பிறந்த இடம் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----

8. உயரம் : அடி :----- அங்குலம் :-----

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.
(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறன்கள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ)-----.
(ஆ)-----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? :-----.
பதவி மற்றும் வழங்கப்பட்ட இலக்கம் :-----.
ஆம் எனின், அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக :-----.

16. (அ) நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் :-----.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீர்களா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீர்களா? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின், விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின், ஏதேனும் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின், விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கைப் பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ...................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கின்றேன்.

.................,
(திணைக்களத் தலைவரின் கையொப்பம்)
பதவி முத்திரை இடப்படவேண்டும்.

பதவி :-----.
திகதி :-----.

01-552/2

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைத் தாண்டல் பரீட்சை - 2013 (I) 2020

1.0 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இன் அலுவலர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவான ஒரு வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை 2020, மே மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2.0 இப்பரீட்சை உரியதாகும் விண்ணப்பதாரர்களைப் பற்றி 1840/34 ஆம் இலக்க 2013.12.11 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள முகாமைத்துவ சேவை அலுவலர் சேவைப் பிரமாணத்தின் பந்தி 08 இனது ஏற்பாடுகள் பந்தி 15 இனது இடைக்கால ஏற்பாடுகள் மற்றும் இணைப்பு 04 இல் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

3.0 முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் III இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையினைப் பூர்த்திசெய்திராத ஆனால் (1) அலுவலக முறைமைகள் (2) கணக்கீட்டு முறைமைகள் (3) கணினிப் பரீட்சை என பெயர் குறிப்பிடப்படும் இப் பரீட்சையின் ஒரு பாடத்தை அல்லது சிலவற்றையோ சித்தியெய்தி அல்லது விலக்களிப்புப் பெற்றுள்ள அலுவலர்கள் பாடத்துக்குப் பாட அடிப்படையில் இச்சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் III இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையின் உரிய பாடங்களிலிருந்து விலக்களிப்புப் பெறல் வேண்டும். ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் இப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

4.0 முகாமைத்துவ சேவை அலுவலர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களும் நகர இலக்கங்களும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. விண்ணப்பிக்கும் நகரம் மற்றும் நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. உத்தேச நகரம் அனைத்திலுமோ அல்லது பலவற்றிலுமோ பரீட்சை நிலையங்களை நிறுவுவதற்கு போதுமான அளவு விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 05 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| குருநாகல் | 18 |
| அநுராதபுரம் | 19 |
| பதுளை | 21 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

மேற்படி ஏதேனும் நிலையங்களுக்காக போதிய அளவு விண்ணப்பதாரிகள் இல்லாவிட்டால் அந்நிலையம் இரத்துச் செய்யப்படுமென்பதுடன் அதற்கு அண்மித்துள்ள நிலையத்திற்கு பரீட்சார்த்திகள் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

5.0. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகள் என்பனவற்றுக்கு விண்ணப்பதாரிகள் அமைந்தொழுக வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகளுக்காக விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன. இவ் ஒழுங்குவிதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாவர்.

6.0 விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் அமைதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் அம்மாதிரி விண்ணப்பத்துக்கு ஏற்ப தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக 2020, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக -

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு (நிறுவனம் சார் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது இருந்த விண்ணப்பதாரியின் பதவி, சேவை நிலையம் மற்றும் பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்களும் கவனத்தில் எடுக்கப்படுவதுடன் பரீட்சை விண்ணப்பம் அனுப்பியதன் பின்னர் நிகழும் மாற்றங்கள் எவையும் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- இவ்வறிவித்தலுக்கு சமாந்தரமாக மாகாண முகாமைத்துவ சேவை அலுவலர் சேவையின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் பொருத்தமான மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலமும் வேறு நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் குறித்த நிறுவனத்தின் மூலமும் வெளியிடப்படும்.

ஒவ்வொரு மாகாண அரசாங்க சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென பின்வரும் குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்பட வேண்டும். உரிய சேவை அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும்போது விண்ணப்பத் தலைப்பில் இவ் இலக்கங்கள் பதியப்படல் வேண்டும். இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் 10 ஆகும். அவ் இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தின் வலது பக்க மேல் மூலையில் உங்கள் சேவை மற்றும் சேவை நிலையத்தில் குறிப்பிட வேண்டும்.

7.0 **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆளடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற் குறிப்பிட்டுள்ள ஓர் ஆவணத்தை சமர்ப்பிக்க தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் படி இரத்துச் செய்யப்படலாம். அதே போல் பரீட்சை விண்ணப்பதாரிகள் தாம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏதுவான வகையில் முகம் மற்றும் காதுகள் மூடப்படாத வகையில் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். தாம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதை ஆட்சேபிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க முடியாது. மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்த நேரம் தொடங்கி பரீட்சை முடிந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரிகளை அடையாளம் காண்பதற்கு ஏதுவான வகையில் முகம் மற்றும் காதுகள் மூடப்படாத வகையில் இருக்க வேண்டும்.

8. **விண்ணப்பங்கள்**.- பந்தி இலக்கங்கள் 1.0 தொடக்கம் 3.0 வரை முதற் பக்கத்திலும் ஏனையவை அடுத்த பக்கங்களிலும் தோன்றும் விதத்தில் "A4" அளவிலான ஒரு தாளில் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பமானது தட்டச்சு செய்யப்பட முடியும். ஆனால் அதை விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்திலேயே சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவமானது பின்னிணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தினையே ஒத்ததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி அனுப்பலாகாது. மாதிரிப் படிவத்துக்கு அமையாத மற்றும் முறையாக முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்கள், இரண்டிலும் மாதிரி விண்ணப்பப் படிவத்தில் காணப்படும்

பரீட்சைத் தலைப்பினை அதேபோல ஆங்கில மொழியிலும் தயவு செய்து குறிப்பிடவும். தன்னால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவமானது பரீட்சை அறிவித்தலில் தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாகவும் சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டதாகவும் விண்ணப்பம் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா எனவும் குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா எனவும் விண்ணப்பதாரியினால் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். மேலும், விண்ணப்பதாரி பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாகும்.

தவறான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை.- விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தித் தகைமையை இரத்துச்செய்ய முடியும்.

முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியதில்லை. எனினும், அடுத்தடுத்த அமர்வுகளுக்கு ஒரே தடவையில் எல்லா விடயங்களுக்கும் தோற்றுவதானால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்களுக்கு தோற்றுவதானால் ரூபா 500.00 உம், ஒரு விடயத்துக்கு மட்டும் தோற்றுவதானால் ரூபா 250 உம் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இக்கு வரவு வைக்கப்படுவதற்கென தீவின் ஏதேனுமோர் தபாலகம்/உபதபாலகத்தில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனப்படலாம். இப்பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் திருப்பியளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக்கு செலுத்திய கட்டணம் வேறொரு பரீட்சைக்கு மாற்றிக்கொள்ள முடியாது. மேலும் பரீட்சைக்கட்டணத்துக்காக முத்திரை அல்லது காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் அனுமானத்திற்கு ஏற்ப அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் பத்திரிகைகளில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் அறிவிப்பொன்று வெளியிடப்படும். பரீட்சை நடத்தப்படுவதற்கு குறைந்தபட்சம் 02 நாட்கள் அல்லது 03 நாட்களுக்கு முன்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு (நிறுவனம்சார் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளைக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சைகள் திணைக்களத்திற்கு கோரிக்கையிடும் வேளையில் விண்ணப்பதாரி தாம் கோரும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை பிழையின்றிக் குறிப்பிட வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் மேற்குறிப்பிட்டுள்ள விபரங்களோடு, அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கைக் கடிதத்தினை தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் ஏதாவதொரு தகவலை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக்கட்டணம் செலுத்தியிருப்பின் அப்பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டையும் கைவசம் வைத்திருத்தல் பிரயோசனப்படலாம்.

10.0 விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டைகள் வழங்குவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் பதவியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கும் சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக கருதப்படமாட்டாது. பரீட்சைக்கு தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் ஏற்கனவே அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளில் தங்களுடைய கையொப்பங்களை இட்டு அதனை பரீட்சையின் முதல் நாளிலேயே பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டைகள் இல்லாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்கு தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாண செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

10.1 விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை நிறுவனத் தலைவரிடம் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரின் மூலம் சான்றுபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

11.0 சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் தொடர்புடைய சேவையில் சேர்வதற்காக பரீட்சைக்கு தோற்றிய மொழியிலோ அல்லது அரச கரும மொழியொன்றிலோ அலுவலர்கள் இப்பரீட்சைக்கு

தோற்றலாம். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்குச் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் அலுவலர்கள் இப்பரீட்சைக்கு தோற்றலாம். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12.0 அலுவலர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்றலாம். எனினும் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

13.0 பரீட்சை பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படுவதுடன் பரீட்சைப் பெறுபேறுகள் பொது நிருவாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14.0 **பரீட்சைத்திட்டம்**.- விண்ணப்பதாரிகள் பின்வரும் பாடங்கள் உள்ளடங்கிய ஓர் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் :

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|---|
| 1. அலுவலக முறைமை | 01 | 100 | 2 மணித்தியாலம் |
| 2. கணக்கீட்டு முறைமை | 02 | 100 | 2 மணித்தியாலம் |
| 3. கணினிப் பரீட்சை | 03 | 100 | 1 1/2 மணித்தியாலம் |

14.1 அலுவலக முறைமை :- (பாட இலக்கம் - 01) அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள அலுவலக முறைமைகள் பற்றிய அடிப்படை அறிவு, அவ் அறிவை நடைமுறையில் பயன்படுத்தும் ஆற்றல், உத்தியோகபூர்வ ஆவணங்களை உரிய முறையில் விளங்கி தெளிவானதும் சுருக்கமானதுமான குறிப்புக்கள் ஊடாக தமது கருத்துக்களை/அவதானிப்புக்களை உறுதியானமுறையில் சமர்ப்பிக்கும் ஆற்றல், கட்டளைக்கு ஏற்ப பருபடியான கடிதங்களை எழுதும் ஆற்றல் என்பன பரீட்சிக்கப்படும்.

இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும்.

பகுதி I - சுருக்க விடைகளை எதிர்பார்க்கப்படும் வினாக்களை கொண்டமைந்திருக்கும் வினாத்தாளிலேயே விடை அளித்தல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II - அமைவு முறை கட்டுரைகளிலான வினாத்தாளாகும். நான்கு வினாக்களில் மூன்றுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்).

14.2 கணக்கீட்டு முறைமை.- (பாட இலக்கம் - 02)

அரசாங்க அலுவலகங்களில் கையாளப்பட்டு வருகின்ற ஆரம்ப கணக்குகள் மற்றும் கணக்கு கட்டுப்பாட்டுப் புத்தகங்களின் செயற்பாடு பற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் அளவிட இதனால் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும்.

பகுதி I - சுருக்க விடைகளை எதிர்பார்க்கும் வினாக்களை கொண்டமைந்திருக்கும் வினாத்தாளிலேயே விடை அளித்தல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II - அமைவு முறை கட்டுரைகளிலான வினாத்தாளாகும். நான்கு வினாக்களில் மூன்றுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

14.3 கணினிப் பரீட்சை (பாட இலக்கம் 03)

பரீட்சார்த்தி பின்வரும் ஆற்றல்களைக் கொண்டுள்ளாரா என சோதிப்பது இப்பரீட்சையின் நோக்கமாகும்.

(i) தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படை எண்ணக்கருக்கள்
(ii) வின்டோஸ் இயக்க முறைமை

(iii) கோப்பு முறை

(iv) சொல் முறைவழிப்படுத்தல் : அடிப்படைத் திறமைகள், திரைக்கு பழக்கப்படல், பாடப்பதிப்பு பாடங்களை நேர்ப்படுத்தல், எழுத்துரு வகையும் பண்புகளும், பந்தி உள்தள்ளல், வரி வெளிகள் மாற்றுதல் தத்தல் அமைப்பு, பாடத்தை கண்டுபிடித்தலும் மாற்றிடுதலும் இலக்கணம் தேசோரஸ் நிரல்கள், பக்க அமைவு செயற்பாடுகள் ஆவணங்களை அச்சிடல், அட்டவணைகள் தயாரித்தல், பாடத்தை வரிசைப்படுத்தல்
கோப்பு முகாமை
அஞ்சல் இணைப்பு
'மக்ரோ' தொழிற்பாடு

(v) அடிப்படைத் திறமைகள்
வடிவமைத்தல் (formatting)
பதிப்பித்தல்
நிரல்களும் வீச்சும், செருகுதல், நீக்குதல் தகவல்களை வரிசைப்படுத்தல்
வரைபடங்களைப் படைத்தல்
அச்சிடல்
@ பயன்பாடு (@ function)
மக்ரோக்களுடன் பணியாற்றல், கோப்பு முகாமை

(vi) இணையம் : இணையத்தை அறிமுகப்படுத்தல், உலகளாவிய வலையமைப்பு, எவ்வாறு வழிகண்டறிதல் இணைய செயல்முறை
மின்னஞ்சல் (e-mail) : அறிமுகம், அடைப்படைத் திறமைகள், அஞ்சல்களைப் பெறுதல் அனுப்புதல், பதிலளித்தல் இணைப்புகளுடன் செயலாற்றல், புனைப் பெயர்களை உருவாக்கி பயன்படுத்தல், தகவல்களை இயற்றுதல்.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

பகுதி I - பல்விருப்பு/ சுருக்கமான பதில்களை எதிர்பார்க்கும் 40 வினாக்களைக் கொண்டமைந்திருக்கும் காலம் - 45 நிமிடங்கள் (40 புள்ளிகள்)

பகுதி II - பகுதி அமைவு ரீதியிலான 05 வினாக்கள். காலம் - 45 நிமிடங்கள் (60 புள்ளிகள்).

15.0 பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறுபவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

16.0 இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

17.0 இவ் அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2020, சனவரி 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2013 (I) 2020**

Efficiency Bar Examination for Officers in Grade III of Management Service Officers' Service – 2013 (I) 2020

உங்களுக்கு உரித்தான சேவை (இதை பூரணப்படுத்தமுன் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6.0 குறிப்பைப் பார்க்கவும்)

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| (வர்த்தமானி அறிவித்தலின் 4.0 படி நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தை விருப்பு ஒழுங்கில் குறிப்பிடவும்.) (இதை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.) | | |

| பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் : |
|---|
| சிங்களம் - 2<br>தமிழ் - 3<br>ஆங்கிலம் - 4 |
| (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)<br>(இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.) |

1.0 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெபிட்டல் எழுத்தில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
உதாரணம் : (GUNAWARDHANA. H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.0

2.1 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
2.2 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
2.3 பிரவேச அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

3.0

3.1 பால் :-
பெண் – 1
ஆண் – 0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

3.2 பிறந்த திகதி : ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

3.3 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

4.0 நீங்கள் இம்முறை பரீட்சையில் தோற்ற உள்ள பாடம்/ பாடங்கள் :
(வர்த்தமானப் பத்திரிகையின் பந்தி 14.0 ஐப் பார்க்கவும்)

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |

5.0 தற்போது வகிக்கும் பதவி :

5.1 பதவி :----.

5.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.

6.0

6.1 நீங்கள் பரீட்சைக்கு முதன் முதலாக தோற்றுகின்றீர்களா ? :----.

6.2 பரீட்சைக்கு தோற்றுவது முதற் தடவை அல்லாது இருப்பின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.

6.3 தபால்/ உப தபால் அலுவலகம் :----.

8.4 பற்றுச்சீட்டு இலக்கம் :----.

8.5 திகதி :----.

| |
|---|
| முழுப் பரீட்சைக்கான பரீட்சைக்கட்டணம் ரூபா 500.00 உம் ஒரு பாடத்திற்காக ரூபா 250.00 உம் ஆவதுடன் அத்தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றை தன்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனப்படலாம்.) |

மேற்குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், மேலே காட்டப்பட்டுள்ள மொழி மூலமாக பரீட்சைக்கு தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும், இத்தால் வெளிப்படுத்துகிறேன். ரூபா ............ தபாலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளேன் என்றும் சான்றுப்படுத்துகின்றேன். இப்பரீட்சை தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமைந்தொழுக நான் உடன்படுகின்றேன்.

------,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்தத் திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் அலுவலரும் தனிப்பட்ட முறையில் எனக்கு தெரிந்தவருமான திரு./ திருமதி/ செல்வி .............. ........................................................ , ................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

------,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(i) மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதென்றும் ;

(ii) இவ் அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன் தோற்றியுள்ளார்/ தோற்றவில்லை என்றும் ;

(iii) அலுவலர் இதற்கு முன்பு பரீட்சைக்குத் தோற்றியிருப்பதனால் உரிய பரீட்சை கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு இவ் விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் ;

(iv) அலுவலர் இப் பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவர் என்றும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

* தேவையற்றவைகளை கீறிவிடவும்.

------,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

*01-504*